DEPOSITION OF WITNESS

(XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

**OS 4230/2020**

Deposition of witness (PW1)

Name : B. Kailash

Father Name : Bapulal

Sex /Age : 50

Address : No. 66, Jarmiyar Road, Veppery, Chennai-7

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of January 2025.

---

**21.01.2025**

**3 மற்றும் 4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் தான் வாதி. பத்திரம் பதிவு செய்து தரும்படி இந்த வழக்கை தாக்கல் செய்தேன்.நான் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த CS.No.1055/2008 என்ற வழக்கில் 3 மற்றும் 4 ம் பிரதிவாதியை தரப்பிரனராக சேர்த்துள்ளேனா என்றால் எனக்கு அது ஞாபகமில்லை. நான் 1 ம் பிரதிவாதியிடையே 28/7/2008 அன்று ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். 3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதியிடம் 11/6/2008 அன்றே ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில் 18/9/2008 அன்று 1 ம் பிரதிவாதி 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு ஒரு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த CS.No. 1055/2008 வழக்கின் பிராதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தாவாவிலும் முதல் விசாரணை

வாக்குமூலத்திலும் நான் உயர்நீதிமன்றத்தில் எந்த தேதியில் CS.No. 1055/2008 தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் 2013 என்று குறிப்பிட்டுள்ளேன், தேதி மாதம் எனக்கு ஞாபகமில்லை. 6/11/2008 அந்த தாவாவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது வழக்கறிஞருக்கு தாக் தெரியும். நான் உயர்நீதிமன்றத்தில் CS.No. 1055/2008 தாக்கல் செய்வதற்கு முன்பே 3 ,4 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் வாங்கிவிட்டார்கள் என்றால் அது சரியல்ல. அவர்களை தரப்பினர்களா சேர்க்காமல் நான் அந்த தாவாவில் தீர்ப்பு வாங்கியது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.நான் அந்த தாவா தாக்கல் செய்யும் போது 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் உரிமையாளர் இல்லை என்றால் அது சரியல்ல. உரிமையில்லாத நபர் மீது தாவா தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றது செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை நான் சுவாதீனம் கோரி பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேன். இந்த தாவாவில் நான் தாவா சொத்தின் உரிமையாளர் என்று உரிமைகோரி பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் CS.NO 1055/2008 தாக்கல் செய்யும்போது தாவா சொத்தை 3ம் நபர்க்கு விற்க்கூடாது என்று உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு சம்மன் சார்பு செய்யப்பட்டது என்று நிரூபிக்கும் பொருட்டு அந்த வழக்கின் சார்பு செய்யப்பட்ட சம்மனின் சான்றிட்ட நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் 3 ,4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையை நான் பார்த்திருக்கிறேனா என்று எனக்கு ஞாபகமில்லை.அவர்கள் தாக்கல் செய்த பதிலுரைக்கு மறுப்பு தெரிவித்து நான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன். தேதி எனக்கு தெரியாது. நான் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் அவர்கள் தான் தாவா சொத்தின் உரிமையாளர்கள் என்று அவர்கள் போட்ட பதிலுரையில் குறிப்பிட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். நான் தாவா சொத்தில் உரிமை விளம்புகைக்கோரி எந்த பரிகாரமும் கேட்காததால் தாவா செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான்

CS.NO 1055/2008 ல் தாவா சொத்தின் வில்லங்கச்சான்று தாக்கல் செய்துள்ளேன். அதன் சான்றிட்ட நகலை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் ஆனால் முதல் விசாரணை வாக்குமூலத்தில் அதைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.தாவா சொத்தை பத்திரப்பதிவு செய்தபின்பு தான் என் வசம் வந்தது. தாவா சொத்தில் இருந்து மாதம் ரூ.25000 வருகிறது என்பதை நிரூபிக்கும் பொருட்டு நான் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 3,4 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு கிரையத்தொகை கொடுத்து தான் தாவா சொத்து கிரையம் வாங்கினார்கள் என்றாலும் பெயரளவில் ஏற்பட்ட கிரையம் இல்லை என்றால் அது சரியல்ல. இந்த வழக்கில் CS.NO 1055/2008 நிலுவையில் இருக்கும்போதே 1ம் பிரதிவாதி 3,4 பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தது செல்லத்தக்கது அல்ல என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான்.அந்த வழக்கில் 3,4 பிரதவாதிகள் தரப்பினர்களா சேர்க்கப்படாததால் அந்த வழக்கின் தீர்ப்பு அவர்களை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கு தாக்கல செய்வதற்கு முன்பே 3,4 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் வாங்கிவிட்டதால் அந்த தாவா அவர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த தாவாவில் 3,4 தரப்பினர்களுக்கு எதிராக நான் எந்த வித பரிகாரமும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and signed by the witness to be correct.

Dt. 21.01.2025 II Addl. District Judge.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and signed by the witness to be correct.

Dt. 20.01.2025 II Addl. District Judge.